## வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II – மற்றும் சுழற்சி நிதியம் - 2016

வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II மற்றும் சுழற்சி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் தற்போது ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை என அறியப்படும் சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2008 யூலை 29 ஆம் திகதிய எஸ்எல்-பி94 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் III ஆம் உறுப்புரையின் 4(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

வறுமை குறைப்பு நுண்பாக நிதியியல் செயற்திட்டம் - II இன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கி செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. வறியோர் வருமான மட்டத்தை முன்னேற்றி வருமானம் உருவாக்கல் நடவடிக்கைகளுக்காக கடன் வழங்குவதன் மூலம் அவர்களுக்காக முறையான நிதிச் சேவையை விருத்தி செய்தல் உட்பட பங்குபற்றல் நிதியளிப்பு நிறுவனங்கள்(பிஎவ்ஐஎஸ்) மற்றும் பங்குடமை முகவர்கள்(பிஏஎஸ்) என்பவற்றின் முகாமைத்துவம் மற்றும் பயிற்சியளித்தல் இயலளவை முன்னேற்றுதல் மற்றும் வருமானம் உருவாக்கல் சந்தர்ப்பங்கள் மற்றும் நலனாளிகளின் இயலளவை அதிகரித்தல் மூலம் வறுமையைக் குறைத்தல் பிரதேச சமமின்மையைக் குறைத்து சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கு ஆதரவு வழங்குவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 3,076 மில்லியனுக்கு சமனான ஜப்பான் ஜென் 2,759 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 2,704 மில்லியனுக்கு சமனான ஜப்பான் ஜென் 2,575 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் வழங்குவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 சனவரியில் தொடங்கியிருந்ததுடன் 2013 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. மேலும், இறுதி பணவளிப்பு நோக்கத்திற்காக கடன் செயற்பாட்டுத் திகதியானது 2015 நவம்பர் 12 வரை நீடிக்கப்பட்டு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக்களிலிருந்து விடுபட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டை தயாரித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை கணக்காய்வு உள்ளடக்கின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில்

சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளக கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் என்பவற்றுக்கிணங்க திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதி மற்றும் பௌதீகரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் மற்றும் சுழற்சி நிதியத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ. ஜென் (மில்லியன்) | ரூபா. (மில்லியன்) | ரூபா. (மில்லியன்) | ஐ. ஜென் (மில்லியன்) | ரூபா. (மில்லியன்) | ஐ. ஜென் (மில்லியன்) | ரூபா. (மில்லியன்) |
| ஜேஐசீஏ | 2,575.00 | 2,704.00 | - | - | - | 2,562.00 | 3,470.00 |
| இலங்கை அரசாங்கம் | 184.00 | 372.00 | 65.00 | - | 53.50 | - | 252.40 |
| | 2,759.00 | 3,076.00 | 65.00 | - | 53.50 | 2,562.00 | 3,722.40 |

## 3.2 பௌதீக முன்னேற்றம்

சேகரிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், செயற்திட்டமானது முன்னைய ஆண்டின் இறுதியில் 11 பங்குபற்றல் நிதி நிறுவனங்களூடாக ரூபா 3,213 மில்லியன் பெறுமதியான 59,215 உப கடன்கள் வழங்கப்பட்டது. அதில் 86 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 50,076 உப கடன்கள் 03 அரசிற்கு சொந்தமான பங்குபற்றல் நிதி நிறுவனங்களூடாக வழங்கப்பட்டிருந்த அதேநேரம் உப கடன்கள் பெறுமதியின் 14 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏனைய 9,139 உப கடன்கள் 08 தனியார்துறை பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் கடன் உடன்படிக்கையின் உறுப்புரை III இன் பிரிவு 4(1) பிரகாரம் சுழற்சி நிதிய கணக்கானது 2011 ஆகஸ்ட் இல் மத்திய வங்கியில் திறக்கப்பட்டு அதன் செயற்பாடானது 2013 இல் தொடங்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், 05 பங்குபற்றல் நிதி நிறுவனங்களூடாக வழங்கப்பட்ட ரூபா 5,647 மில்லியன் பெறுமதியான உப கடன்களில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,567 மில்லியன் தொகையானது விடுவிக்கப்பட்டது.

## 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பிரதான இடைநடுவர் ஒப்பந்தத்தை மீறியதன் காரணமாக 2016 திசெம்பர் 12 இல் முதிர்ச்சியடைந்த நேர்மாற்று மீள்கொள்வனவு முதலீடு மீதான வழக்கிழப்பு நட்டம் ரூபா 34.59 மில்லியன் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டது.